**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப்

பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | சம்பந்தப்பட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 07 இன் படி சொத்துக்களின் மீள் மதிப்பீட்டின் போது அவைகளுக்குரிய சகல சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவிற்கு உரிய 10 வாகனங்களில் 02 ஐ மாத்திரம் ரூபா 5,550,000 க்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கீட்டினை ஒத்தி வைக்கப்பட்ட பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 02 வாகனங்களை மதிப்பீடு செய்யப்பட்டதினால் ஏற்பட்ட ரூபா 5,550,000 க்கான மீள் மதிப்பீட்டு மிகையினை வெளிப்படுத்தப்பட்ட பொறுப்பு கணக்கிலிருந்து மிகை கணக்கினை இவ்வருடத்தில் மாற்றப்படும். | இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக கிரயம் ரூபா 4,643,333 வான 05 மோட்டார் வாகனங்கள் முழுதாக தேய்மானத்திற்கு உட்படுத்தி இருந்த போதிலும் மேற்கொண்டு பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழு | நிரந்தர சொத்துக்களின் அட்டவணைப்படி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏடுகளில் பெறுமதியினை பூஜ்யமான சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்க முடியும். | இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பணம் செலுத்தப்பட்டு உருப்படியாக கிடைக்கப் பெறாத ரூபா 4,861,144 க்கான சொத்துக்கள் நிரந்தர சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | ரூபா 2,334,400 தொகைக்கான கணிப் பொறிக்கும் ரூபா 532,420 தொகைக்கான வயிரஸ் காரட்க்கும் 2020.12.17 திகதி மற்றும் 2020.12.11 திகதி காசோலைகள் எழுதப்பட்டுள்ளன. தொற்றுக் காரணமாக அப்பொருட்கள் திசெம்பர் 31 வரையிலும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. ரூபா 1,994,324 க்கான நிழற்பிரதி இயந்திரத்தின் காசோலை திசெம்பர் மாதத்தில் எழுதப்பட்டிருந்த போதிலும் 2021 முதல் 2-3 மாதத்திற்கிடையிலான அப்பொறி மத்திய நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்தது. | பொருட்களை சரியாக பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் அவைகளை சொத்துக்களாக கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.6 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றின் கவனத்திற்கு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச்சட்ட மூலம் மற்றும் 2004 யூலை 24 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/25 கொண்ட பொது வியாபார சுற்று | மீளாய்வாண்டில் நிதி அமைச்சரின் உடன்பாட்டினை பெற்றுக் கொள்ளாது நிரந்தர வைப்புக் கணக்கில் ரூபா 3,500,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 3,500,000 நிரந்தர வைப்புக்கான ஆணைக்குழுவின் தீர்மானத்தினை 2009 ஆண்டு முதற்கொண்டு இதுவரையிலும் பெற்றுக் | நிதியத்தினை முதலீடு செய்யும் போது நிதிச் சட்ட மூலம் மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையி |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிருபம் | | கொள்ளப்பட்டிருந்தது. நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இரு பிரதிநிதிகள் சட்ட உதவி ஆணைக்குழுவில் பிரதிநிதிகளாக செயற்படுகின்றனர். இதற்காக எம்மால் உழைக்கப்பெற்ற பணமும் உள்ளாக்கப்பட்டிருந்தது. | ன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் வருட இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடனான வரைவுக்கான வருடாந்த அறிக்கையினை கணக்காய்வாளரிடம் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கான ஆணைக்குழுவின் அறிக்கையின் பொழிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | செயலாற்றல் தகவல்களுக்கு மேலதிகமாக வருடாந்த அறிக்கையின் வரைவினை முன் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெறப்படாது தனிப்பட்ட காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டில் 56 ஊழியர்களின் நூற்றுக்கு 50 க்கான சந்தாவான ரூபா 1,169,989 காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தனிப்பட்ட காப்புறுதி தொடர்பாக நிதி அமைச்சின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சட்ட உதவி ஆணைக்குழுவினால் ஒவ்வொரு வருடம் சனவரி மாதமும் காப்புறுதி கம்பனிகளிலிருந்து சில விலைமனுக்கள் கோரப்பட்டு எமது ஊழியர்களுக்கு பொருத்தமான காப்புறுதி திட்டமொன்று தெரிவு செய்யப்படும். | சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை பெறுபேறு ரூபா 21,323,099 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 35,418,539 தொகையாக இருந்தது. இதனால் நிதி விளைவுகளில் ரூபா 14,095,440 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு வருமானத்தின் அதிகரிப்பு பிரதான காரணமாகும்.

## 3. நடவடிக்கை மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 27 கொண்ட சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 4(ஓ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டஉதவி வழங்கப்படுவதற்கான குறிப்பிடதொரு பிரிவு தொடர்பாக பரீட்சார்த்தமான வேலைத்திட்டங்கள், சட்டப் பிரச்சினைகளுக்கான மையங்கள் மற்றும் திட்டங்கள் வகுப்பதனை கட்டுப்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றிற்கு ஆதரவளிப்பதன் மூலம் அக்காரியங்களுக்காக வேலைத்திட்டங்கள் மற்றும் நீள் திட்டங்கள் ஏற்படுத்தி அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு தேவையான பணிக்குழாமினை சேவையில் ஈடுபடச் செய்தல் ஆகிய அதிகாரங்கள் இதுவரை செயற்படுத்துவதற்கு இயலாது போய் உள்ளன. | மீளாய்வாண்டினுள் 03 பிரதேச செயலகங்கள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் சகல ஆட்சேர்ப்பினையும் தற்காலிகமாக இடை நிறுத்தியமை, நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள இயலாது போனதுடன் 2021 இல் புது ஆட்சேர்ப்பினை மேற்கொண்டு புது சட்ட உதவி அலுவலகங்கள் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளன. | அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களை செயற்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) பொது சட்ட உதவி வேலைத்திட்டத்தினை சிவில் சமூகத்தினுள் மிக முறையாக வழுவூட்டலினை மேற்கொள்ளும் நோக்கில் | உத்தேச சட்ட உதவி தேசிய கொள்கையினை செயற்படுத்துவதற்காக நீதி அமைச்சுடன் சேர்ந்து தற்போதைக்கு | சட்ட உதவி வேலைத்திட்டத்தினை உரிய முறையில் செயற்படுத்து வதற்கான |

| | | |
|---|---|---|
| 2016 மார்ச் 30 ஆந் திகதி இலங்கைக்கான உத்தேச சட்ட உதவி தேசிய கொள்கையினை அமைச்சரவையினால் அங்கீகரித்திருந்த போதிலும் அதனை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டு வருகின்றது. | நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 நடவடிக்கை செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்ட உதவி வழங்குவதற்காக 2019 மற்றும் 2020 வருடங்களில் நடைபெற்ற 45,033 வழக்குகளில் மீளாய்வாண்டில் 8.466 வழக்குகளை தீர்ப்பதற்காக வழக்கறிஞர் உதவியினை சட்ட உதவியினை பெற்றுக் கொடுக்கப்பட்டு 36,567 வழக்குகள் மீதியாக இருந்தன. அது மொத்த வழக்கு எண்ணிக்கையில் நூற்றுக்கு 81 சதவீதமாக இருந்தது. | நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குகளின் அளவு மிகவும் அதிகமாக இருப்பதனால் 2020 ஆண்டு நிலவிய கொவிட் தொற்றினால் அதிகமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு இயலாது இருந்தது. அவ்வாறான நிலைமையின் கீழ் சுமார் 19% எண்ணிக்கையினை தீர்த்து வைக்கப்பட்டமை தரப்பினர் பெற்ற வெற்றியாகும். | செயலாற்றலினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் சிரேஷ்ட தரத்திலான 27 வெற்றிடங்கள் உட்பட 79 வெற்றிடங்கள் நிலவின. அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் உட்படாத சிரேஷ்ட தரத்திலான 03 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் மற்றும் இரண்டாந் தரத்திலான 01 பதவிக்கு நிரந்தர அடிப்படையில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகாரமின்றி சட்ட மையங்களுக்காக தற்காலிகமாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட பணிக்குழாமிற்கு மீளாய்வாண்டில் | திறைசேரியினால் சகலவித ஆட்சேர்ப்பினையும் இடைநிறுத்தியமையும், நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமையும் பொதுத்தேர்தல் காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டில் இயலாது போயிற்று. உதவிப் பணிப்பாளர் / பதில் பணிப்பாளர் (சட்டம்) 03 | அத்தியாவசியமான பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 2,144,529 செலுத்தப்பட்டிருந்தது. | பதவிகளும் மற்றும் உதவிப் பணிப்பாளர் / பதில் பணிப்பாளர் (பிராந்திய) 09 பதவிகளுக்காக தற்போது நேர்முகப் பரீட்சை நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. உதவிப் பணிப்பாளர் / பதில் பணிப்பாளர் (நிதி) பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் ஏனைய வெற்றிடங்கள் புது சட்ட உதவி ஆணைக்குழு மத்திய நிலையங்களை தாபிப்பதன் பின்னர் பூர்த்தி செய்யப்படும். பணிக்குழாமுடன் தொடர்புபடாத சிரேஷ்ட தரத்திலான இரு பதவிகளும் எதிர்காலத்தில் தீர்க்கப்படும். ஆலோசகரை ஆட்சேர்ப்பு தொடர்புடைய ஆவணங்கள் தங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எங்களுடைய மத்திய நிலையங்களுக்கு தற்காலிக ஆட்சேர்ப்பு தொடர்பாக நீதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018, 2019 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை 2021 ஏப்ரல் மாதம் இறுதியிலும் கூட | 2018 வருடத்திற்கான வருடாந்த அறிக்கையை முன்வரும் இரண்டு | உரிய காலத்தில் வருடாந்த அறிக்கைகளை |

| | | |
|---|---|---|
| பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவும், 2019 வருடாந்த அறிக்கையை இவ்வருட இறுதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு காரியத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு, காரியத்தினை ஆரம்பிக்கப்படும் மற்றும் முடிக்கப்படும் திகதியினை சரியான முறையில் காட்டப்பட்டிருக் காததுடன், செயற்பாடுகளின் முன்னேற்றத்தையும் திட்டத்திற்கேற்ப முன் வைக்கப்படாமையினால் செயலாற்றுகையினை பரீட்சிப்பதற்கு முடியாது போனது. | 2021 செயற்பாட்டு திட்டத்தில் இக்குறைபாட்டினை சரி செய்யப்பட்டுள்ளது. | செயலாற்றுகையினை மதிப்பீடு செய்யக் கூடியவாறு வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினையும் முன்னேற்ற அறிக்கையினையும் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவின் 2020 வருடத்திற்கான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 வருடம் தொற்று நிலமை காரணமாக உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு முடியாது போனதுடன் 2021 வருடம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதற்கு உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ளப்படல் வேண்டும். |